பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 22 ஞாயிற்றுக்கிழமை 05.05.2024 கதிர் 179

## ரணிலின் பொருளாதார சீரமைப்பு திட்டங்களுக்கு ஜப்பான் பாராட்டு



இலங்கையைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுத்து, பொருளாதாரத்தை நிலைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்து வரும் வேலைத்திட்டம் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார மறுசீரமைப்புகளுக்கு ஜப்பான் அயலுறவுத் துறை அமைச்சர் யோகோ கமிகாவா பாராட்டு தெரிவித்தார்.

இருநாள் பயணமாக இலங்கை வந்துள்ள ஜப்பானிய அயலுறவுத்துறை அமைச்சருக்கும் ஜனாதிபதி ☞ 2

## இன்றிருப்பது புதுமையான ஆட்சி

### ஜனாதிபதி ரணில் தனது உரையில் தெரிவிப்பு

இன்று இருப்பது புதுமையான ஆட்சியாகும். தொடர்ந்தும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தி எதிர்கால இளைஞர் சமூகத்திற்கான சிறந்த எதிர்காலத்தைக் கட்டமைக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பொலன்னறுவை மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற மகாவலி குடியிருப்பாளர்களுக்கு 'உறுமய' வேலைத்திட்டத்தின் கீழ் காணி உறுதிகள் வழங்கும் நிகழ்விலேயே ☞ 8

## நீரிழிவு, புற்றுநோய்களுக்கான மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு

### அரச மருந்தாளர் சங்கம் சுட்டிக்காட்டு

நீரிழிவு, புற்றுநோய், இருதய நோய்கள் உள்ளிட்ட பல நோய்களுக்கு தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு தட்டுப்பாடு காணப்படுவதாக அரச மருந்தாளர்கள் சங்கத்தின் தலைவர் துஷார ரணதேவ தெரிவித்துள்ளார்.

மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு தட்டுப்பாடு காரணமாக நோயாளர்கள் பல பிரச்சினைகளை ☞ 8

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் உள்வீடு பற்றிக்கொண்டு எரியும் நிலையில், கட்சியை மட்டுமல்ல ஏனைய கட்சிகளையும் ஒன்றாக்குவேன் என்று சூளுரைத்துக்கொண்டு பதவிக்கு வந்த, தெரிவுசெய்யப்பட்ட தலைவரான சிறீதரனே இப்போது கட்சியைப் பிளவுபடுத்தி, சுமந்திரனை ஒதுக்கி நடக்கத் தொடங்கிவிட்ட நிலையில் கட்சியின் பெருந்தலைவர் சம்பந்தன், தமிழரின் அரசியல் தீர்வு விவகாரம் இப்படியே ஒதுக்கப்பட்ட நிலையில் இருக்க அனுமதிக்க முடியாது அது தொடர்பில் ஏதாவது செய்யவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார் என்று அறிய வந்தது.

அரசியல் தீர்வு, அதிகாரப் பகிர்வு மற்றும் தீர்வுக்கான பேச்சுக்கள் எல்லாம் அப்படியே காலாவதியாகிப்போன நிலையில் இருப்பதால், அவற்றுக்கு புத்துயிர் அளிக்கும் விதத்தில் ஜனாதிபதி, இந்திய அரசு, சர்வதேச சமூகத்தினர் ஆகியோருக்கு மீண்டும் கடிதங்களை எழுத வேண்டும் என்று பெருந்தலைவர் தெரிவித்திருக்கிறார்.

வேடிக்கை ☞ 2

## கடும் வெப்பம் இன்னும் இரு வாரங்கள் நீடிக்கும்

தற்போது நிலவும் அதிகூடிய வெப்பநிலை இன்னும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களத்தின் சிரேஷ்ட வளிமண்டலவியல் நிபுணர் சமிந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

மனித உடலால் உணரப்படும் அதிகூடிய வெப்பநிலை தற்போது நாட்டில் நிலவி வருகிறது. தென்மேற்கு பருவமழை வலுவடையும் வரையில் தற்போதைய வெப்பநிலையில் மாற்றம் ஏற்படாதென்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மாதத்தின் இரண்டாவது வாரத்தின் பின்னர் தென்மேற்கு காற்றின் வேகம் வலுவடையுமெனவும் அவர் குறிப்பிட்டார். இதற்கமைவாக இந்த நிலைமையை மனித உடலால் உணரப்படும் அதிகூடிய வெப்ப நிலை என்று குறிப்பிடலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக எதிர்வரும் 14 நாட்களுக்கு பொதுமக்கள் இயன்றவரை சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படுவது முக்கியமானதாகும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் சிரேஷ்ட ☞ 2

# வாக்காளர்களுக்கு இலஞ்சம்; ஆளும்தரப்பு மீது குற்றச்சாட்டு

### அரச சொத்துக்கள் வீணடிப்பு என்கிறது 'பவ்ரல்'

வாக்காளர்களுக்கு இலஞ்சம் வழங்குவதற்காக ஆளும் தரப்பு அரச சொத்துக்களை பயன்படுத்துகின்றது என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல்களிற்கு இன்னமும் சிலமாதங்களே இருக்கை ☞ 2

## இலங்கைக்குத் தேவையான ஒத்துழைப்பை ஒரு நண்பனாக ஜப்பான் தொடர்ந்தும் தரும்

### அந்நாட்டு அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

'நண்பன் என்ற ரீதியில் இலங்கைக்கு அவசியமான ஒத்துழைப்புக்களை ஜப்பான் தொடர்ந்து வழங்கும்' என்ற செய்தியைக் கூறுவதற்காகவே தான் இலங்கைக்கு வருகைதந்திருப்பதாக தெரிவித்துள்ள ஜப்பானிய அயலுறுவுத்துறை அமைச்சர் யொகோ கமிகவா, இலங்கைக்கும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவினருக்கும் இடையில் வெகுவிரைவில் இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் எனத் தான் எதிர்பார்க்கிறார் எனவும் தெரிவித்ததுடன், அந்த இணக்கப்பாடு வெளிப்படைத்தன்மை வாய்ந்த முறையில் அமைய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இருநாள் பயணமாக இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பான் அயலுறவுத்துறை அமைச்சர் யொகோ கமிகவா மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரின் கூட்டு ஊடக சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது. ☞ 8

## அதிகாரப் பகிர்வு குறித்து ஜப்பானுக்கு விளக்கம்

### தரப்பட்டது என்கிறார் அயலுறவுத்துறை அமைச்சர்



ஒருமைப்பாடு மற்றும் தேசிய நல்லிணக்கத்தை அடைந்துகொள்வதை முன்னிறுத்தி எவ்வித வெளியகத் தலையீடுகளுமின்றி உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு போன்ற உள்ளக செயன்முறைகளை ☞ 2

## எதிர்க்கட்சித் தலைவரையும் சந்தித்தார் ஜப்பான் அமைச்சர்

ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால திட்டங்கள் குறித்து ஜப்பானிய அயலுறவுத் துறைஅமைச்சர் யோகோ கமிகாவாவுக்கு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விளக்கமளித்துள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் ஜப்பான் அயலுறவுத் துறை அமைச்சர் யோகோ கமிகாவா இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து இருதரப்பினரும் நீண்ட நேரம் கலந்துரையாடியதுடன், இலங்கை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி குறித்து எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜப்பானிய வெளிவிவகார அமைச்சருக்குத் தெளிவுபடுத்தினார். நெருக்கடியிலிருந்து விடுபட ஐக்கிய மக்கள் சக்தியின் திட்டங்கள் குறித்தும் விளக்கமளித்தார்.

இந்த ஆண்டு இந்நாட்டின் அரசியலில் ஒருமுக்கியமான ஆண்டு என்றும், முக்கியமான தேர்தல் ☞ 8

## பிணைமுறி மறுசீரமைப்பு பேச்சு விரைவில் இணக்கத்துக்கு வரும்

### நிதி இராஜாங்க அமைச்சரின் நம்பிக்கை இது

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச பிணைமுறி உரித்தாளர்கள் குழுவினருடன் முன்னெடுக்கப்பட்டு வரும் பேச்சு வெகுவிரைவில் இணக்கப்பாடு எட்டப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கும், சர்வதேச பிணைமுறி உரித்தாளர்கள் மற்றும் அவர்களது ஆலோசகர்களுக்கும் இடையேயான கடன் மறுசீரமைப்பு குறித்த பேச்சு அண்மையில் லண்டனில் நடைபெற்றது.

இதன்போது மொத்த உள்நாட்டு உற்பத்தி மாற்றங்களுடன் தொடர்புடைய பிணைமுறிகளை மறுசீரமைப்பது குறித்து பொது இணக்கப்பாடொன்று எட்டப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் பிணைமுறி உரித்தாளர்களும் தீர் ☞ 8

## பொருளாதார சீரமைப்பில் மாற்றமே இருக்கக்கூடாது

### அது தொடரவேண்டும் என அமெரிக்கா வலியுறுத்து

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மற்றும் அவற்றில் எந்தவித மாற்றங்களுமின்றி தொடர்ந்து முன்னெடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் நெருக்கடிகள் ஏற்படாதிருப்பதற்கு ஏதுவாக அமையுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள பொருளாதார சீர்திருத்தங்கள் நாட்டின் பொருளாதாரத்தை ☞ 2

## இந்திய தேர்தலை கண்காணிக்க இலங்கைக்கும் அழைப்பு விடுப்பு

இந்திய நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் சர்வதேச தேர்தல் பார்வையாளர் நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக இந்த ☞ 2

## இனி இது .....

என்னவென்றால் இந்த விடயங்கள் குறித்து அவர் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுடனோ தெரிவு செய்யப்பட்ட தலைவர் சிறீதரனுடனோஎதுவும்பேசவில்லை. நாடாளுமன்ற உறுப்பினரும் இப்போது கட்சிக்குள் சிறீதரன் அணியினரால் தீண்டதகாதவராக ஒதுக்கப்படுபவருமானசுமந்திரனை அழைத்தே பெருந் தலைவர் இந்தக் கடித விவகாரங்கள் குறித்து ஆராய்ந்துள்ளார் என்று நெருக்கமான வட்டாரங்கள் மூலம் அறிய முடிந்தது.

கட்சிக்குள் இது குறித்தெல் லாம் வேறு ஒருவரும் அக்கறை கொள்ளமாட்டார்கள், நானும் நீங்களும்தான் அதற்கான நடவடிக்கைகளைஎடுக்கவேண்டும் என்று பெருந்தலைவர் சுமந்திரனிடம் கூறினார் என்றும் தகவல். உடல் நிலை காரணமாக நாடாளுமன்ற நடவடிக்கைகளில் இருந்து மூன்று மாத விடுமுறை பெற்றுக்கொண்டுள்ள சம்பந்தர், ஓரிரு நாட்களுக்கு முன்னர் தனது இல்லத்தில் சுமந்திரனைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

அது குறித்து இரு தரப்பினருமே எந்தவிதத் தகவல்களையும் வெளிப்படுத்தவில்லை. கட்சிக்குள் பெரும் களேபரம் ஏற்பட்டுள்ள நிலையிலும்கட்சியைச்சிக்கலுக்குள் மாட்டிவிட்டுள்ள தி-ருகோணமலை மாவட்ட கட்சி உறுப்பினரின் வழக்கு விவகாரம் பூதாகாரமாகி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மற்றும் சுமந்திரனுக்கு இடையில் அது ஒரு நிரந்தரப் பிளவை ஏற்படுத்தியிருக்கும் நிலையில் சம்பந்தர் - சுமந்திரன் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்திருக்கும் என்றுதான் உங்களைப் போல் நானும் கருதி, கட்சி விவகாரங்கள் குறித்து என்ன பேசினார்கள்என்றுதுருவித்துருவித் தேடினேன். கடைசியில் அது பற்றிப் பெருந் தலைவர் எதுவும் அலட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை என்கிற பதில்தான் கிடைத்தது.

அதிகாரப் பகிர்வு, தீர்வு முயற்சிகள், அரசியல் பேச்சுக்கள் என்பவற்றைமீளவும்தொடங்குவது தொடர்பில்தான்அவர்சுமந்திரனுடன் அந்தச் சந்திப்பில் முழுமையாகப் பேசியிருக்கிறார். சுமந்திரன் புறப்பட்டுப் போகும்போது மட்டும் கட்சிக்குள் இப்போது நடக்கும் விடயங்கள் குறித்தெல்லாம் கவலைப்பட்டுக்கொண்டிருக்க வேண்டாம். எல்லாம் சரிவரும் என்கிற பாணியில் ஒரு கருத்தை மட்டும் உதிர்த்தார் பெருந்தலைவர் என்று அறிந்தேன். கட்சி உள்வீட்டு விவகாரங்கள் குறித்து இருவரும் வேறுஎதுவும்பேசிக்கொள்ளவில்லை என்பதுதான் உறுதியான தகவல்.

நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால்கட்சிக்குள்பேசிஇந்தவிவ காரங்களைத் தீர்க்கக்கூடாது என்று ஏதாவது சட்டதிட்டங்கள் இருக்கின்றனவா என்று தெரிய வில்லை.ஏனெனில்கட்சியின்பெருந் தலைவரோ அல்லது தலைவராகத் தொடரும் மாவையரோ அது பற்றியெல்லாம் அக்கறைப்படுவது போன்று தெரியவில்லை. கட்சி பிளவுபடக்கூடாது என்தற்காகத்தான் தலைவர் பதவிக்குப் போட்டி வேண்டாம் என்று அவர்கள் வலியுறுத்தியதுஉண்மைஎன்றால், தற்போதுகட்சிசிறீதரனின்நகர்வுகள் மூலம் பிளவு நிலைநோக்கிக் கொண்டு செல்லப்படுவதைத் தடுக்க இவர்கள் ஏன் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்பதும் தெரியவில்லை. தீர்வு முயற்சிகளுக்குமட்டும்சுமந்திரனை வைத்துக்கொள்ளலாம், மக்களை ஏமாற்றி வாக்குகளை சேகரிக்க சிறீதரனை வைத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறார்களோ என்னவோ...

என்னமோநடக்குது,ஒண்ணுமா புரியலை...

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## வாக்காளர்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில்ஆளும்தரப்புஅரசசொத்துக்களை தவறாக பயன்படுத்துகின்றது. ஜனாதிபதி தேர்தலை நோக்கமாக கொண்டு ஆளும் தரப்பு பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது. வறிய மக்களிற்கு இலவசமாக அரிசி வழங்கும் திட்டத்தினால் வரிசெலுத்துவோரின் மில்லியன் கணக்கான பணம் வீணடிக்கப்படுகின்றது.

அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காகஒவ்வொருஉள்ளூராட்சிப் பகுதிக்கும் ஆளும்தரப்பு 10 மில்லியனை ஒதுக்கீடுசெய்துள்ளது மாகாணஆளுநரின்விருப்பத்தின்படி இந்தநிதிபயன்படுத்தப்படும்.ஆளுநர் ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதி ஆவார். இது ஜனாதிபதி தேர்தலை மையமாகக்கொண்ட நடவடிக்கை என்பது வெளிப்படையான விடயம்.

ஜூலை 31ஆம்திகதிக்குள் இந்தத் திட்டங்களை பூர்த்திசெய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார், ஓகஸ்டில் ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியாகும். இதனாலேயே ஜூலை 31ஆம் திகதிக்குள் இந்த திட்டங்களை பூர்த்தி செய்யஆளும்தரப்புவிரும்புகின்றது என்றார்.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்திரப்படுத்த வழிவகுத்திருப்பதாக அமெரிக்க திறைசேரி திணைக்களத்தின் பிரதி செயலாளர் ரொபேர்ட் கப்ரோத் தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 57ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜோர்ஜியாவுக்கு சென்றுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவைசந்தித்தபோதேஅவர் இந்தவிடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் காணப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் அங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கைக்கு அமெரிக்கா மீண்டும் முழு ஒத்துழைப்பை வழங்குவதற்கும் உறுதியளித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் (தெற்கு, மத்திய மற்றும் மேற்கு ஆசியா) லுஷ்பெ அஷ்பெ லுயபெ உடனும் அமைச்சர் கலந்துரையாடினார். இலங்கைக்கும்ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையிலான புதிய 2024-2028கூட்டாண்மைமற்றும் மூலோபாயத் திட்டம் மற்றும் மக்ரோ பொருளாதார (பருவினப் பொருளியல்) ஸ்திரத்தன்மையை பேணுவதற்கானசீர்திருத்தங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படும்ஒத்துழைப்புகுறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

பொருளாதார ரீதியில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும்கடன்மறுசீரமைப்புசெயல் முறை தொடர்பான மேலதிக விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை இலங்கைக்கு ஆதரவளிக்கும்ஆசிய அபிவிருத்தி வங்கியின்வலுவானஅர்ப்பணிப்பை லுஷ்பெஅஷ்பெ லுயபெ மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இலங்கையின் தலைமையில் ஜோர்ஜியாவின் திபிலிசியில் நடைபெற்ற சார்க் அபிவிருத்தி நிதியத்தின் நிர்வாக சபையின் ஏழாவது கூட்டம் நடைபெற்றது. இலங்கையின் தலைமைத்துவத்தின் போது சார்க் அபிவிருத்தி நிதியத்தின் நோக்கங்களை அடைதல் மற்றும் உறுப்பு நாடுகள் முன்னோக்கிப் பயணிப்பதற்கு அளித்துவரும்தொடர் ஆதரவுக்கும் அமைச்சர் இதன்போது நன்றி தெரிவித்தார்.

சார்க் அபிவிருத்தி நிதியத்தின் நிர்வாக சபையின் அடுத்த தலைவராக பங்களாதேஷ் நிதி அமைச்சர் அபுல் ஹசன் மஹ்மூத் அலியிடம்பொறுப்புகளைகையளிக்கும்நிகழ்வும்அங்குநடைபெற்றது.

## அதிகாரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவுவதற்கும், அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கும் ஆளும் தரப்பு கொண்டிருக்கும் கடப்பாடு குறித்தும் ஜப்பானிய அயலுறவுத்துறை அமைச்சருக்கு விளக்கப்பட்ட தாக அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இருநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பான் அயலுறவுத்துறை அமைச்சர் யொகோ கமிகவா மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரின் கூட்டு ஊடக சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.

அங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் அலி சப்ரி மேலும் தெரிவித்ததாவது:

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் சுமார் 72 வருடகாலமாக நெருங்கிய நட்புறவு பேணப்பட்டு வருகின்றது. இந்நட்புறவானது அண்மைய காலங்களில் இரு நாடுகளுக்கும் இடையில் பரஸ்பரம் இடம்பெற்ற உயர்மட்ட பயணங்களால் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நானும் ஜப்பானிய அயலுறவுத்துறை அமைச்சர் யொகோ கமிகவாவும் பரந்துபட்ட விடயங்கள் தொடர்பில் இருதரப்புக் கலந்துரையாடலை முன்னெடுத்திருந்தோம்.

இதன்போது கடந்த காலங்களில் இலங்கை மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த வேளையில், ஜப்பான் வெளிப்படுத்திய நட்புறவு மற்றும் வழங்கிய உதவிகளுக்காக நான்அவருக்குநன்றிதெரிவித்தேன். அதேபோன்று வெளியகக் கடன் மறுசீரமைப்பு செயன்முறையில் ஜப்பான் வழங்கிவரும் பங்களிப்பு மற்றும் ஜப்பான் அரசினால் வழங்கப்பட்ட நிதியுதவி என்பவற்றுக்கும்நன்றிகூறுகிறேன்.

அதேபோன்றுபொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், கடன் உறுதிப்பாட்டை விரிவுபடுத்தவும், வளர்ச்சியை மையமாகக் கொண்ட மறுசீரமைப்பு செயன்முறைகளை நடைமுறைப்படுத்தவும் இலங்கையால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து ஜப்பான் வெளிவிவகார அமைச்சருக்குத் தெளிவுபடுத்தினேன்.

இலங்கையின் பொருளாதார உறுதிப்பாடு, மீட்சி மற்றும் எதிர்கால வளர்ச்சி என்பன குறித்த அமைச்சர் யொகோ கமிகவா தனது நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார். அதன்படி தற்போது இலங்கையில்முன்னெடுப்பதற்கென உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களையும்,மின்சாரம்,உட்கட்டமைப்பு, துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் புதிய முதலீட்டுத் திட்டங்களையும் ஆரம்பிக்குமாறு நான் அவருக்கு அழைப்பு விடுத்துள்ளேன். இலகு ரயில் சேவைத் திட்டத்தையும் மீள ஆரம்பிப்பது குறித்து கலந்துரையாடியிருக்கிறோம்.

ஒருமைப்பாடு மற்றும் தேசிய நல்லிணக்கத்தில்அடையப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அமைச்சர் யொகோ கமிகவாவுக்கு விளக்கமளித்ததுடன், அவற்றை முன்னிறுத்தி எவ்வித வெளியகத் தலையீடுகளுமின்றி உண்மை மற்றம் நல்லிணக்க ஆணைக்குழு போன்றஉள்ளகசெயன்முறைகளை நிறுவுவதற்கும், அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதற்கும் அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாடு குறித்தும் எடுத்துரைத்தேன் என்றார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை;

# கோட்டாவின் மூடிமறைக்கும் பணி இந்த ஆட்சியில் தீவிரம்

## கர்தினால் மல்க்கம் ரஞ்சித் குற்றச்சாட்டு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தாது, அதனை மூடி மறைக்க முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆரம்பித்த செயற்பாடுகள், தற்போதைய ஆளும்தரப்பில் அதனை விட உயர் மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ச அண்மையில் வெளியிட்ட அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் விடுத்துள்ள அறிக்கையில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இதனைத் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தமக்கு கிடைத்த மறுநாள், தாம் பேராயருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தவில்லை என முன்னாள் ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ தெரிவித்த கருத்தானது முற்றிலும் பொய்யானது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ச எனக்கு அவ்வாறான தொலைபேசி அழைப்பெடுத்ததை மீண்டும் உறுதிப்படுத்துகின்றேன். எனக்கு நெருங்கிய அமைப்புகளுக்கு எதிரான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முடியாதென அந்த அழைப்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச கூறினார்.

அதேபோன்று, தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காத பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு எதிராக, ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அவரது பதவிக்காலத்தில் நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படவில்லை?

ஜனாதிபதி ஆணைக்குழுவின் சில பரிந்துரைகளை தெரிவு செய்து தப்பித்துக்கொள்வதற்காக, கோட்டாபய ராஜபக்சஅமைச்சரவைஉபகுழுவைநியமித்தமையானது, பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை விடவும், நடைமுறைப்படுத்தாமல் இருப்பதிலேயே அவர் அக்கறையாக இருந்தார் என்பதைக் காட்டியது.

அந்தச் சந்தர்ப்பத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு பொறுப்பாக இருந்தவரை மாற்றி, தனக்கு நெருக்கமானவரை அந்தப் பொறுப்பில் நியமித்ததன் காரணமாக குறித்த விசாரணைகள் வலுவிழந்தமை தொடர்பில் தாம் புதிதாகக் கூற வேண்டியது இல்லை.

அதேபோன்று, ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விசாரணை மற்றும் வழக்குகளை முன்னெடுக்காது, உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மூடி மறைக்க முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆரம்பித்த செயற்பாடுகள், தற்போதைய ஆளும் தரப்பில் அதனைவிட உயர் மட்டத்தில் முன்கொண்டு செல்லப்படுகிறது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் சுயாதீனமான, வெளிப்படையான மற்றும் உண்மையுள்ள விசாரணைகள்விரைவாகமுன்னெடுக்கப்படவேண்டும். அவ்வாறான விசாரணைகள் மேற்கொள்ளப்படும்வரை அதுதொடர்பில்தாம்அவதானத்துடன்செயற்படுகின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடும் வெப்பம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளிமண்டலவியல் நிபுணர் சமிந்த டி சில்வா மேலும் தெரிவித்தார்.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன் போதே ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதிக்குபாராட்டுத்தெரிவித்தார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை விரிவுபடுத்தல், இலகு ரயில் திட்டம் உட்பட ஜப்பான் அரசின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டு, தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளஅபிவிருத்தித் திட்டங்களை விரைவாக மீள ஆரம்பிப்பதே ஜப்பானின் நோக்கமாகும் எனவும் ஜப்பான் அயலுறவுத்துறை அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் கடன் மறுசீரமைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விரைவில் கைச்சாத்திடுவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

பெண்களின் உரிமைகள் மற்றும் பாலின சமத்துவத்திற்காக தொடர்ச்சியாகக் குரல் கொடுத்துவருபவரான ஜப்பானிய அயலுறவுத் துறைஅமைச்சர்கமிகாவா,அதற்காக இலங்கையில் மேற்கொள்ளப்படும் புதிய சட்டத் திருத்தங்கள் உள்ளிட்ட சாதகமான நடவடிக்கைகளுக்கும் பாராட்டுத் தெரிவித்தார்.

இதன்போது, இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான வரலாற்று உறவை நினைவுகூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் வகையில் ஒத்துழைப்புக்களை பலப்படுத்திக்கொள்வதே தனது நோக்கமாகும்என்றும்தெரிவித்தார்.

அதேவேளை இலங்கைப் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட வேளையில்ஜப்பான் வழங்கிய ஒத்துழைப்பிற்கும் ஜனாதிபதி நன்றி கூறினார்.

வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணிவிஜேவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கானஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச். எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் சர்வதேச விவகாரப் பணிப்பாளர் தினுக் கொழும்பகே ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஜப்பானிய அயலுறவுத்துறை அமைச்சர் யோகோ கமிகவா பிரதமர் தினேஷ் குணவர்தனவை நேற்று அலரி மாளிகையில் சந்தித்துப் பேசினார்.

கடுமையான பொருளாதார பின்னடைவை எதிர்கொண்டுள்ள இலங்கையின் ஆரம்ப நிலை திருப்திகரமாக காணப்படுவதால், இலங்கையின் பொருளாதார மீட்சியில் ஜப்பான் மிகுந்த நம்பிக்கையுடன் இருப்பதாக ஜப்பானிய அமைச்சர் பிரதமரிடம் தெரிவித்தார்.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஆணையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய தேர்தலொன்று நடைபெறுவதைக் காண்பதற்காக 23 நாடுகளில் உள்ள தேர்தல் முகாமைத்துவ அமைப்புகளுடன் தொடர்புடைய 75 சர்வதேசபார்வையாளர்களுக்கு இந்திய தேர்தல் ஆணையகம் அழைப்பு விடுத்துள்ளது.

மே மாதம் 4 ஆம் திகதி முதல் மே 9ஆம் திகதி வரை நடைபெறுகின்ற சர்வதேச தேர்தல் பார்வையாளர் நிகழ்ச்சியில் இலங்கையைபிரதிநிதித்துவப்படுத்தி 10 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழு பங்கேற்கின்றது.

இந்த தூதுக்குழுவில் இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் இரண்டு பிரதிநிதிகள் மற்றும் தேர்தல்சட்ட சீர்திருத்தங்களுக்கான

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் மொழி மற்றும் தமிழ் இனம் என்பவைவையையே பேச்சாகவும் மூச்சாகவும் கொண்டவர் ஈழவேந்தன்

## கனடா தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அஞ்சலி

தமிழ்மொழி, தமிழ் இனம் என்பதே பேச்சும் மூச்சுமாக வாழ்ந்த ஈழவேந்தன் இயற்கை எய்தினார் அரசியல், தமிழ்த் தேசியம், தமிழ்மொழிப் பற்று, பொதுத் தொண்டு ஆகியவற்றுக்கு தன்னை

முழுமையாக அர்ப்பணித்த அமரர் ஈழவேந்தன் அவர்கள் தனது 91 ஆவது அகவையில் காலமானார் என அறிந்து வேதனை அடைகிறோம். - இவ்வாறு தனது அனுதாபச் செய்தியில் கனடா தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தனது இளமைக் காலம் முதல் மறையும் வரைக்கும் ஓய்வு ஒழிச்சலின்றி - எந்தவித தொய்வும் இன்றி இனப்பற்றோடும் மொழிப பற்றோடும் வாழ்ந்தவர். தமிழ் ஆங்கிலம் என இரு மொழிகளிலும் சரளமாக

எழுதவும் பேசவும் வல்லமை படைத்தவர். எண்ணற்ற மேடைகளில் பேசியவர். எங்கெல்லாம் தமிழர்க்கு ஒரு தீங்கென்றால் அங்கெல்லாம் அவரது குரல் ஓங்கி ஒலித்தது.

பிரதமர் இந்திரா காந்தி, பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய், பிரதமர் விஸ்வநாத் பிரதாப் சிங், கலைஞர் கருணாநிதி போன்ற வரலாற்றுப் புகழ்பெற்ற தலைவர்களோடு தமிழ் மக்களது உரிமைகள் பற்றி

உரையாடியவர். அப்போது எல்லாம் தமிழ் மக்களது தமிழீழக் கோரிக்கையில் வரலாற்று ரீதியாக உள்ள நியாயங்களை முன்வைத்தவர்.

அமரர் ஈழவேந்தன் அவர்களது குரல் மூன்று ஆண்டுகள் இலங்கை நாடாளுமன்றத்திலும் ஓங்கி ஒலித்தது. தமிழ் மக்களின் உரிமை என்று வந்துவிட்டால் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல் எங்கும் எப்போதும் அஞ்சாது போராடியவர். பல சமயங்களில் தனியே நின்று போராடியவர். கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே என்ற அறிவுரைக்கு ஏற்ப பின் விளைவுகளைப் பற்றி கவலைப்படாதவர்.

எந்த விட்டுக் கொடுப்பும் இல்லாமல் வெட்டொன்று துண்டு இரண்டு எனப் பேசியவர்.

அவரது மறைவால் வாடும் அவரின் துணைவியாருக்கும், பிள்ளைகளுக்கும் மற்றும் உற்றார் உறவினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறாம். - என்றுள்ளது. (05)

## மாவனல்லை சாஹிராவால் 33 லட்சம் ரூபா காசா சிறுவர் நிதியத்துக்கு நன்கொடை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

காஸா சிறுவர் நிதியத்திற்கு மாவனெல்ல சாஹிரா கல்லூரியால் 33 லட்சம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியை கல்லூரி அதிபர் ஏ.எச்.எம். நௌஷாட் தலைமையிலான குழுவினர் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளனர்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளரும் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளருமான சரத் குமார, கல்லூரி ஆசிரியர்களான எஸ்.எம்.நவாஸ், எம்.எஸ்.எம்.நளீம், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் ரிலாப் மொஹமட், பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் எல்.எம் ரிப்கான் மற்றும் எம்,எஸ். எம். நிலார்தீன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர். (05)

## கல்முனை சாஹிரா தேசிய பாடசாலைக்கு பவள விழா நினைவு கட்டம் நிர்மாணிப்பு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய கல்முனை சாஹிரா தேசிய பாடசாலைக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் முயற்சியால், தான் கல்விகற்ற பாடசாலைக்கு 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முதற் கட்டமாக சுமார் 60 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புதிய கேட்போர் கூடத்துடனான நிர்வாகக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

அதற்கான விலை மனுக்கோரல் அம்பாறை அரசாங்க அதிபரால் தேசிய பத்திரிகைகள் வாயிலாக கோரப்பட்டுள்ளது. பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு, பழைய மாணவர்கள் அமைப்பின் பங்குபற்றலுடன் பாடசாலை அதிபர் எம்.ஐ. ஜாபிரின் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கள விஜயத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் மதிப்பீட்டு அறிக்கையும், சாத்தியவள செயற்பாடுகளையும் நேரில் சென்று பார்வையிட்டதுடன் கட்டடத்தை நிர்மாணிக்கத் தேவையான நடவடிக்கைகளை நிதியமைச்சு, கல்வி அமைச்சு, கல்வித் திணைக்களம் போன்றவற்றில் மேற்கொண்டிருந்தார்.

இந்த நிர்மாண பணிகளுக்கு தேவையான மேலதிக விடயங்களை அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம். சாஹிர் தலைமையிலான மாவட்ட செயலக அதிகாரிகளும், கல்வித்திணைக்கள அதிகாரிகளும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## கடற்படை சிப்பாய் சுட்டுத் தற்கொலை!



முழங்காவில் கடற் படை முகாமில் பணியாற்றிய கடற்படை சிப்பாய் ஒருவர் அன்றைய தினம் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடல் பரப்பில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை எடுத்து தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து இறந்த இராணுவ வீரர் தனுஸ்கயான் பிரேமரத்ன மைத்திரிகம சிரிபுர பகுதியைச்சேர்ந்த கடல்படை சிப்பாயே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டார் இச்சம்பவம் தொடர்பாக முழங்காவில் பொலீசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05 - 113)

## தெல்லிபபழை ஆதார வைத்தியசாலையில் குருதிச் சுத்திகரிப்புப் பிரிவு விரிவாக்கம்





தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இரத்த சுத்தகரிப்புப் பிரிவு விஸ்தரிக்கப்பட்டு, வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளர்களுக்கு முழுமையான சேவையை வழங்கும் முகமாக செயற்பத்தப்பட்டு வருகின்றது.

இதன் திறப்புவிழா கடந்த வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது.

அரச நிதியில் மீள் புனரமைப்புச் செய்யப்பட்ட இந்தப் பிரிவை யாழ்.போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ரி.பேரனந்தராஜா, யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்தீய கலாநிதி பிரம்மா ஆர் தங்கராஜா, சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் விருந்தினராகக் கலந்து திறந்துவைத்தனர்.

ஏற்கனவே இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் 3 தொழிற்பட்ட நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் மகாராஜா நிறுவனம் ஊடாக வழங்கப்பட்ட 4 ஆவது இயந்திரமும் இந்த விஸ்தரிப்பின் பீின்னர் தொழிற்பட உள்ளது. இந்த விஸ்தரிப்பின் பின்னர் 7 இயந்திரங்கள் பொருத்தும் அளவுக்கு இடவமைப்பு அமைந்துள்ளமை குறிப பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அக்கறை செலுத்தப்படவேண்டிய விடயம்

இலங்கையில் பிறப்பு வீதம் மற்றும் திருமணங்களின் வீதம் என்பன கணிசமாக வீழ்ச்சி அடைந்துள்ளதுடன் குழந்தைகளின் இறப்பு வீதம் அதிகரித்து வருகின்றது என்கின்றன புள்ளிவிவரங்கள்.

இலங்கையில் 2023 ஆம் ஆண்டில் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது, திருமணங்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதாகவும் குழந்தைகள் இறப்பு வீதம் படிப்படியாக அதிகரித்து வருவதாகவும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் கற்கைகள் பீடத்தின் மூத்த பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்திருக்கிறார்.

2019இல் 3 லட்சத்து 19 ஆயிரத்து 10 ஆக இருந்த குழந்தைகளின் பிறப்பு எண்ணிக்கை, 2023இல் 2 லட்சத்தி 47 ஆயிரத்து 900 ஆகக் குறைந்துள்ளது. அதன்படி, ஐந்து ஆண்டுகளில் பிறப்புகள் 71 ஆயிரத்து 110 என்ற எண்ணிக்கையால் குறைந்துள்ளது, அல்லது 22% குறைந்துள்ளது. இதுவே 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, பிறப்புகள் 27 ஆயிரத்து 421 என்ற எண்ணிக்கையால் குறைந்துள்ளது. இது 9 சதவீத வீழ்ச்சி. கடந்த ஐந்து ஆண்டுகளில் குழந்தைகளின் இறப்பு வீதம் 24 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

திருமணங்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சி அடைந்துள்ளது. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2023 இல் திருமணங்களின் எண்ணிக்கை 12,022 அல்லது 7% குறைந்துள்ளது. 2022 உடன் ஒப்பிடுகையில், இது 19,784 என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது. அந்த ஆண்டில் திருமணங்கள் 11% குறைவு.

கொரோனா பெருந்தொற்று, அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, ஏற்கனவே நடைமுறையில் உள்ள குடும்பக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் என்பவற்றின் காரணமாகவே இந்தநிலைஏற்படுவதாகமதிப்பிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இது குறித்துத் தெற்கில் அதிகம் பேசப்படுகின்றது, எழுதப்படுகின்றது, அக்கறை காட்டப்படுகின்றது. ஆனால், தமிழ்த் சமூகத்தில் அது குறித்த அக்கறைகளை அதிகளவில் காணமுடியவில்லை. உண்மையில் நாட்டின் சராசரியுடன் ஒப்பிடும்போது தமிழர்கள் மத்தியில் குழந்தைகள் பிறப்பு வீதமும் திருமணங்களின் வீழ்ச்சி வீதமும் இன்னமும் மிக அதிகமாக இருப்பதற்கான சாத்தியங்களே அதிகம். அதற்கான தனியான கணக்கெடுப்பு விவரங்கள் இல்லாத காரணத்தால் புள்ளிவிவரங்களைத் தொகுக்கமுடியாதபோதும், தமிழர்கள் வாழும் பகுதிகளில் தொடர்ச்சியாக மாணவர்கள் இல்லை என்ற காரணத்தினாலேயே ஆரம்பப் பாடசாலைகள் பலவும் மூடப்பட்டு வருவது தமிழர்களின் பிறப்பு வீதத்தில் காணப்படும் வீழ்ச்சிக்கான சிறந்த எடுத்துக்காட்டு.


போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு தமிழர்கள் மத்தியில் பெண்களின் திருமண வயது மிக அதிகமாக இருப்பதால் ஏற்படும் கருவளப் பாதிப்பு மற்றும் சாதிய சீதன முறைகளால் தடைப்படும் திருமணங்கள் என்பன தமிழர்கள் மத்தியில் பிறப்பு வீதக் குறைவையும் திருமணங்களின் வீழ்ச்சியையும் ஊக்குவிக்கும் மேலதிகக் காரணிகளாக இருக்கின்றன. இளம் சந்ததியினரின் புலம்பெயர்தல் வேகமாகியிருக்கும் நிலையில் பிறப்பு வீதக் குறைவும் திருமணங்களின் வீழ்ச்சியும் நாட்டில் தமிழர்களின் நிலையை மேலும் பலவீனப்படுத்தும். உரிமைகள் கோரிக்கைகள், அரசியல் அதிகாரப் பகிர்வுக் கோரிக்கைகள் என்பவற்றின் மீதும் பெரும் பாதிப்பைச் செலுத்தும்.

அப்படியிருந்தும் இந்தப் பிரச்சினை மீது தமிழ் அரசியல்வாதிகளும் சமூகத் தலைவர்களும் அக்கறை செலுத்தாதிருப்பதும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தாதிருப்பதும் கவலைக்குரியது. விரைவில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது இலங்கையில் தமிழர்களின் எதிர்காலத்திற்கு அச்சுறுத்தலாக அமையும்.



# நான் அம்மா ஆகவில்லையே, ஏன்?

கு.கணேசன்



ஒரு தம்பதிக்குக் குழந்தை இல்லாத தன்மையில் இரு வகை உண்டு. முற்றிலுமாக குழந்தை பிறக்காமலேயே போய்விடுவது (Primary sterility) ஒரு வகை. கரு கலைந்தோ, ஒரு குழந்தை பிறந்த பிறகோ குழந்தை பாக்கியம் இல்லாமல் போவது (Secondary sterility) அடுத்த வகை. இந்த இரண்டில் முதலாம் வகையைச் சரிசெய்வதுதான் மருத்துவர்களுக்குப் பெரிய சவால்.

ஆணுக்கு விரைகள் ஆரோக்கியமாக இருக்க



வேண்டியது எவ்வளவு முக்கியமோ, அதே அளவுக்குப் பெண்ணுக்குச் சூலகங்களும் (Ovaries) இருக்க வேண்டும். பெண்ணின் இடுப்புப் பகுதியில் கருப்பைக்கு வலது, இடது பக்கங்களில் கருக்குழாயின் (Fallopian tube) இரு முனைகளிலும் பலாக்கொட்டை போன்று தொங்கிக்கொண்டிருக்கின்றன இரண்டு சூலகங்கள்.

இவற்றில் ஒவ்வொரு மாதமும் சுமார் 30 சினைமுட்டைகள் உற்பத்தியாகின்றன. ஒவ்வொரு சூலகத்திலிருந்தும் மாதம் ஒருமுறையாக மாறி மாறி சினைமுட்டைகள் முதிர்ச்சி அடைந்து அருகில் உள்ள ஈர்ப்புக்குழாய்களுக்குச் (குஐஅடிசயைந) செல்கின்றன. ஆனாலும், ஒரே ஒரு சினைமுட்டை மட்டுமே கருக்குழாய்க்குள் நுழைய முடிகிறது.

### குழந்தை உருவாகும் அதிசயம்!

மாதாமாதம் 28 நாள்களுக்கு ஒருமுறை மாதவிலக்கு ஏற்படும் ஒரு பெண்ணுக்கு, மாதவிலக்கு ஆன நாளிலிருந்து 12வது நாள் முதல் 17வது நாள் வரை ‘நல்ல நேரம்’! ஆம்! ஒரு பெண்ணின் சினைப்பையிலிருந்து சினைமுட்டை வெடித்து வெளிவந்து, இந்த நாட்களில் ஏதாவது ஒரு நாளில் கருக்குழாய்க்கு வந்து காத்திருக்கும். வெடித்து வெளிவந்த பின் இரண்டு நாட்களுக்குத்தான் அது உயிரோடு இருக்கும். அதற்குள் ஆண், பெண் கலவி நடந்தால்தான் விந்தணு சினைமுட்டையுடன் கலந்து கரு உருவாக முடியும். அதற்குத்தான் இந்த நாட்களை ‘நல்ல நேரம்’ என்று சொன்னேன்! பொதுவாக, 10ஆம் நாளிலிருந்து 20ஆம் நாள் வரை இரண்டு நாள்களுக்கு ஒருமுறை இணைந்தால் கரு உருவாகிற வாய்ப்பு கிடைக்கும்.

இப்படித் தாம்பத்தியம் சரியாக நடக்கும்போது ஆணின் உயிர்த் திரவம் கருப்பை வாய்க்கு அருகில் கொட்டப்படுகிறது. அதிலுள்ள உயிரணுக்கள் எனும் வீரர்கள் ‘வெற்றி அடைந்தே தீருவோம்’ என்று வீராவேசமாகப் புறப்பட்டுச் செல்லும் போர்வீரர்களைப் போல எப்படியும் சினைமுட்டையை அடைந்தே தீருவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு கருப்பைக்குள் நுழைவார்கள். பாதி தூரம் போனதும் பாதி ‘வீரர்கள்’ களைப்படைந்து பயணத்தை நிறுத்திக்கொள்வார்கள். மீதிப் பேர்தான் பயணத்தைத் தொடர்வார்கள். இவர்கள் மட்டுமே சினைமுட்டையின் ‘கோட்டைக் கத’வை மோதிப் பார்ப்பார்கள். ஆனால், ஏதாவது ஒருவருக்குத்தான் அதிர்ஷ்டம் கிடைத்து ‘கோட்டைக் கதவு’ திறந்து வழிவிடும். இது முதல்கட்ட அதிசயம்.

சினைமுட்டைக்குள் அதிர்ஷ்டக்கார ‘மாவீரன்’ நுழைந்த மறுகணமே, முட்டி மோதும் மற்ற ‘வீரர்கள்’ உள்ளே நுழைவதைத் தடுக்க, சினைமுட்டையின் கோட்டைக் கதவு மூடிக்கொள்வது இன்னொரு அதிசயம். மணமேடையில் காத்திருக்கும் மணமகளைப்போல சினைமுட்டையில் அதன் உட்கருவான ‘இளவரசி’ காத்திருப்பார். உள்ளே புகுந்த ‘மாவீரன்’ அந்த இளவரசியின் கழுத்தில் ‘மாலையிட’ கரு எனும் புதிய உயிர் உருவாகிறது. பிறகு அது கருப்பைக்கு வந்து, சமத்தாக அமர்ந்து, சிசுவாக வளர்ந்து, குழந்தையாக இந்த பூமியில் ஜனிப்பது கடைசி கட்ட அதிசயம்.

### பெண்ணுக்கு ஏற்படும் தடைகள்

மருத்துவ நியதிப்படி, திருமணமாகித் தாம்பத்தியத்தில் திருப்தியாக இருந்துகொண்டிருக்கும் ஒரு தம்பதிக்கு இரண்டு வருடங்கள் கழித்தும் குழந்தை இல்லை என்றால்தான் அவர்களுக்குப் பிரச்சினை இருப்பதாகக் கருத வேண்டும். ஆனால், நடைமுறையில் திருமணமான மறுமாதமே ‘விஷேசம் இல்லையா?’ என்று கேட்டுத் தம்பதிகளைத் தலைகுனிய வைக்கும் குடும்பங்களை அதிகம் பார்க்கிறோம். இந்த நிலைமை மாற வேண்டும்.

வீட்டைச் சுற்றி நான்கு பக்கமும் சுவர் எழுப்பினால்தான் வீட்டுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். அதுபோல் உயிரணு, சினைமுட்டை, கருக்குழாய், கருப்பை இந்த நான்கும் சரியாக அமைந்தால்தான் ஒரு தம்பதிக்குக் குழந்தை பாக்கியம் கிட்டும். பெண்ணைப் பொறுத்த அளவில் ஆரோக்கியமான சினைமுட்டை உருவாக வேண்டியது மிக முக்கியம்.

சிலருக்குச் சினைமுட்டை உருவாகாமல் போகலாம். அப்படியே உருவானாலும் அது கருக்குழாய் வழியாக கருப்பைக்கு நகர்ந்து வருவதில்

(10 ஆம் பக்கம் பார்க்க..)

# புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தி புலைமைப் பரிசில் வெற்றியாளர் கௌரவிப்பு







புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலய அதிபர் அருப்பணி அ றொபின்சன் ஜோசப் தலைமையில் புலைமைப் பரிசில் பரீட்சை வெற்றியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

புலைமைப் பரிசில் பரீட்சை வெற்றியாளர்களையும் விருந்தினர்களையும் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டு மாங்கள சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலய பழைய மாணவர் சங்க செயலாளர் சிங்கராசா அருள்நேசனும் சிறப்பு விருந்தினராக முல்லை மறைக்கோட்ட குரு முதல்வர், புதுக்குடியிருப்பு பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் கஃபொஃத சாதாரண தர பரீட்சையில் திறமை சித்தி பெற்ற மாணவர்களுக்கும் புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் கல்வி கற்று பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்களுக்கும் கணித பாடத்தில் ஒலிம்பியாட் போட்டியிலும் விளையாட்டுகளில் திறமை பெற்றவர்களுக்கும் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (05)



## ஸ்ரீ சபாரத்தினத்தின் நினைவேந்தல் நிகழ்வு

(எஸ்.கார்த்திகேசு)

ரெலோ தலைவர் ஸ்ரீசபாரத்தினத்தின் 38ஆவது சிரார்த்த தினம் திருக்கோவில் பிரதேசத்தில் கட்சியின் போராளிகளால் அனுஷ்டிக்கப்பட்டது

இந்நினைவேந்தல் அனுஷ்டிப்பு தமிழீழ விடுதலை இயக்கத்தின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி நேசநாதன் தலைமையில் திருக்கோவில் 01 இடம்பெற்று இருந்தது.

இதன்போது தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் ஸ்ரீசபாரத்தினத்தின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து தீபச் சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலிகள் இடம்பெற்று இருந்தன.

இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலை இயக்கம், தமிழிழ மக்கள் விடுதலைக் கழகம் மற்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை இயக்கம் ஆகிய கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஸ்ரீசபாரெத்தினத்தின் விடுதலைப் போராட்டம் பற்றி நினைவுப் பேஷரூரைகளையாற்றி இருந்தனர்.

இந் நினைவேந்தல் அனுஷ்டிப்பில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் உபதலைவர் கு.கென்றி மகேந்திரன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மாவட்ட அமைப்பாளர் சங்கரி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்ணனி சம்மாந்துறை மற்றும் திருக்கோவில் பிரதேச இணைப்பாளர்கள், முன்னாள் திருக்கோவில் பிரதேச சபை தவிசாளரும் தமிழீழ விடுதலை இயத்தின் தலைமைப் பீட உறுப்பினருமான இ.வி.கமலராஜன் மற்றும் மேற்படி கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் போராளிகள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சுத்திகரிப்புப் பணியாளர்களின் உரிமைகளில் அக்கறையின்மையால் தொழிலாளர் அதிருப்தி

## ஆசிர்வாதம் ஜோன்சன் தெரிவிப்பு




குப்பையில்லா தூய்மையான நாட்டை உருவாக்க கடுமையாக உழைத்து வரும் சுத்திகரிப்பு பணியாளர்களின் உரிமைகளுக்கு பொறுப்பானவர்கள் அக்கறையின்மையால் தொழிலாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

உலக தொழிலாளர் தினத்தை முன னிட்டு, அதற்கு முன்தினம் யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய வடமாகாண சுத்திகரிப்பு தொழிலாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஆசிர்வாதம் ஜோன்சன், தொழிற்சங்க இயக்கங்களின் ஆதரவுடன் நாட்டின் உயரிய கதிரைக்கு வந்தவர்களும் கூட பின்னர் தொழிலாளர் உரிமைகளை மறுப்பதாக சுட்டிக்காட்டினார்.

'நாங்கள் தோல்விடைந்துள்ளோம். எங்களது உரிமைகள் மறுக்கப்படு கின்றன. எங்களது உரிமைகள் குறித்து மகஜராக கையளித்தாலும் அது நிராகரிக்கப்படுகிறது. இந்த நாட்டின் ஒவ்வொரு ஜனாதிபதிகளும் தொழிற்சங்கத்தில் இருந்துதான் வந்திருக்கின்றார்கள். எனினும் அவர்கள் நாட்டின் தலைவர்களாக வந்த பின்னர் தொழிலாளர்களின் உரிமைகளை மறுக்கின்ற சூழல் உருவாகிறது.' என்றார்.

பணியில் இருக்கும் சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கு போதிய பாதுகாப்பு அங்கிகள் மற்றும் உபகரணங்களை அதிகாரிகள் வழங்காததால், எதிர்காலத்தில் தொழிலாளர்கள் நோய்வாய்ப்படும் அபாயம் இருப்பதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

'தொழிலாளிகள் தமது வேலைகளை செய்கின்ற போது அவர்கள் பாதுகாப்பு அங்கிகளை பயன்படுத்த வேண்டும். எனினும் அது குறைவாக காணப்படுகிறது. எதிர்காலத்தில் தொழிலாளிகள் நோய்வாய்ப்படும் நிலைமை உருவாகிறது. வேலைகளை செய்கின்றபோது சீருடை, பாதணி, கையுறை அணிந்திருக்க வேண்டும். இதற்கான ஏற்பாடுகள் குறித்து அந்தந்த பிரதேசத்தில் பொறுப்பாளர்களாக செயற்படுபவர்கள் மற்றும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். - என்றார்.

தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டியவற்றை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடமாகாண சுத்திகரிப்பு தொழிலாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஆசிர்வாதம் ஜோன்சன் இந்த ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்தார்.

'வீதிகளில் பணியாற்றும் மற்றும் பல இடங்களில் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் காணப்படுகின்றோம். ஒன்று அரச ஊழியர்கள், ஒன்று தனியார் ஊழியர்கள். அரசாங்கம் எமக்குத் தர வேண்டியதை தர வேண்டும். எங்கள் சம்பளம் உயர வேண்டும். பொருளாதார நெருக்கடியிலும் நாங்கள் தொழிலை முன்னெடுக்கின்றோம் எனினும் எங்கள் சம்பளம் உயரவில்லை. - என்றார .(05)

# மன்னாரில் இடம் பெற்ற சமூக அபிவிருத்திக்கான பல்கலாசார இளையோரின் ஒன்றிணைவு நிகழ்வு



கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் சமூக அபிவிருத்திக்கான பல் கலாசார இளையோரின் ஒன்றிணைவு எனும் தொனிப்பொருளில் நிகழ்வு வியாழக்கிழமை மாந்தை மேற்கு பிரதேச சபை மைதானத்தில் இடம்பெற்றது.



மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக மன னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ,சிறப்பு விருந்தினர்களாக மாந்தை மேற்கு உதவி பிரதேச செயலாளர் ,அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ,நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது இளைஞர்,யுவதிகளின் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்ற தோடு,வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. (05)





## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிந்துரைகளை உருவாக்குவதற்கான குழுவின் 8 பிரதிநிதிகள் உள்ளடங்குகின்றனர்.

இலங்கை தூதுக்குழுவின் பங்கேற்பு, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கும், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான தேர்தல் நடைமுறைகள் தொடர்பிலான அறிவு மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்குமான முக்கிய தளமாக அமையுமெனவும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது

## பிணைமுறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொன்றுக்குவருவதற்குகாத்திருப்பது குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாக நிதிஇராஜாங்கஅமைச்சர்ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

'இறுதிக்கட்ட இணக்கப்பாடொன்றை எட்டுவதில் அவர்கள் ஆர்வம் காண்பித்துள்ளனர். இவ்விடயத்தில் சில காரணிகள் தொடர்பில் கலந்துரையாட வேண்டியுள்ளது. சர்வதேச பிணைமுறிஉரித்தாளர்களுடனான இரண்டாம் சுற்றுப் பேச்சு இணக்கப்பாடொன்றைஎட்டுவதற்குஉதவும் என நாம் நம்புகின்றோம்' எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அதுமாத்திரமன்றி இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பான இறுதி இணக்கப்பாட்டை எட்டுவதை முன்னிறுத்தி தாம் பணியாற்றிவருகின்றனர் என்றும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கைக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் யொகோ கமிகவா மேலும் தெரிவித்ததாவது:

எனதுபிறப்பிடமானஷிஸுவோகா 'க்ரீன் டீக்கு பெயர்போன இடமாகும். எனவே, 'க்ரீன் டீ' விளையும் மண்ணில்இருந்துமுதன்முறையாக 'சிலோன் டீ' விளையும் மண்ணுக்கு வருகை தருவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஜப்பானுக்கு இலங்கை வழங்கியஊக்கமும்,சமாதானத்தைக் கட்டியெழுப்பல், புனர்வாழ்வளித்தல் மற்றும் மீள்கட்டியெழுப்பல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட இலங்கையின் முயற்சிகளுக்கு யஸுஷி அகாஷி தலைமையில் ஜப்பானால் வழங்கப்பட்ட ஆதரவும் இரு நாட்டு மக்களினதும் நினைவலைகளில் இருக்குமென நம்புகிறேன்.

கடந்தஜனவரிமாதம்ஜப்பானின் நோட்டோ பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்ட வேளையில், இலங்கை எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவிகளை வழங்கியது.

இரு வருடங்களுக்கு முன்னர் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த வேளையில், இலங்கைமக்களின்தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் ஜப்பானும் பல்வேறு உதவிகளை வழங்கியது.

அதுமாத்திரமன்றி உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுக்கு இணைத்தலைமை வகிக்கும் ஜப்பான், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் முன்னெடுக்கப்படும் சர்வதேச மட்டத்திலான பேச்சுகளுக்கும் தலைமை தாங்குகிறது.

இந்து சமுத்திர பிராந்தியத்தின் கேந்திர நிலைய முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்திருக்கும் இலங்கையில் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பன மீளுறுதிப்படுத்தப்படுவது ஒட்டுமொத்த இந்து - பசுபிக் பிராந்தியத்தினதும் உறுதிப்பாடு மற்றும் சுபீட்சம் என்பவற்றுக்கு இன்றியமையாததாகும்.

'நண்பன் என்ற ரீதியில் ஜப்பான் இலங்கைக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கும்' என்ற செய்தியை கூறுவதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன். அதற்கமைய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடனான சந்திப்பின்போது இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை செயற்திறன் மிக்க வகையில் மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்ந்தோம்.

அதேபோன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் கடன் நெருக்கடி மற்றும் மறுசீரமைப்பு செயன்முறையை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றை இலங்கைஉரியவாறுகையாள்கிறது.

அந்தவகையில்,இலங்கைக்கும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவினருக்கும் இடையில் வெகுவிரைவில் இருதரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமென நாம் எதிர்பார்க்கின்றோம். இருப்பினும் அனைத்துக் கடன்வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடானது வெளிப்படைத்தன்மை வாய்ந்த முறையில் அடையப்படவேண்டும்.

தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி இலங்கை ஆளும் தரப்பால் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு ஜப்பான் ஆதரவளிக்கும்.

இலங்கையினால் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் பலதரப்பட்ட மறுசீரமைப்புக்கள் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்கு இன்றியமையாதவையாகும் என்றார்.

## நீரிழிவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகம் விஜேசூரியவிடம் வினவிய போது, வைத்தியசாலைகளில்இதுவரையில் 20 சதவீதமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுதாக அவர் தெரிவித்தோடு, எவ்வாறாயினும், அதற்கு மாற்று மருத்துகள் நாட்டில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், வைத்தியசாலைகளில் அரிதாக தேவைப்படும் 115 வகையான மருந்துகளுக்கு தட்டுபாடுகள்நிலவுவதோடு,அவற்றை கொள்வனவு செய்வதற்கான நிதி மற்றும் அனுமதிகளை வைத்தியசாலைகளுக்கு பெற்றுக்கொடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எதிர்க்கட்சித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறுவதால் அது தொடர்பிலும் ஜப்பானிய அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், தற்போதைய படுமோசமானஆட்சியைமுடிவுக்குக் கொண்டு வந்து, மக்கள்சார் ஆட்சி உருவாக்கப்பட்ட பின்னர், நாட்டை மீண்டும் வழமை நிலைமைக்குக் கொண்டுவர ஐக்கிய மக்கள் சக்தி எவ்வாறு திட்டமிட்டுள்ளது என்பது குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

## இன்றிருப்பது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரங்கில் இருக்கும் அனைவரும் அனுமதி பத்திரங்களுடன் மாத்திரமே வந்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் இங்கிருந்து வெளியேறும் போது காணி உரிமையாளர்களாகச் செல்வீர்கள். உங்கள் காணிக்கு நிரந்தர உரித்து கிடைக்கும். நமது சமூகத்தில் காணி உரிமை கௌரவமாகப் பார்க்கப்படுகிறது. காணியின் பெறுமதி எமக்கான அந்தஸ்தாகவும் மாறும்.

இந்நாட்டில் பெருமளவானர்களுக்கு அவர்கள் பரம்பரையாக வசித்த காணிக்கு சட்டபூர்வமான அனுமதி கிடைக்கவில்லை. 'உறுமய' திட்டத்தின் கீழ் அந்த காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்படும். அதன் பின்னர் நீங்கள் எவருக்கும் அடிபணிய வேண்டியதில்லை. உங்களுக்கு கிடைக்கும் நிரந்தர காணி உரிமையை இரத்துச் செய்யவும் அதிகாரம் இல்லை.

மக்களுக்கு காணி உறுதிகளை வழங்க ஆளும்தரப்பு முன்னெடுத்திருக்கும் வேலைத்திட்டம் புரட்சிகரமானது. உலகின் வேறு எந்தவொரு நாட்டிலும் இவ்வாறான திட்டம் செயற்படுத்தப்படவில்லை. நாம் மிகப்பெரிய புரட்சியைச் செய்திருக்கிறோம். விவசாயத்திற்காக மாத்திரமின்றி, வீட்டு உரிமைகளையும் வழங்கியிருக்கிறோம். மாடிக் குடியிருப்புகளில் வசிப்போருக்கும் வீட்டு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதனாலேயே இந்த திட்டத்தை உலகின் புரட்சிகர திட்டமென கூறுகிறோம். இத்திட்டம் நாட்டு மக்களுக்கான விடுதலையாகும்.

காணி உறுதியை துரிதமாக தயாரிப்பது குறித்து அமைச்சரவையிலும் ஆலோசித்தோம். பிரதமர் இந்த பணிகளைப் பொறுப்பேற்றுள்ளார். அது தொடர்பில் தேடியறிந்து பணிகளை முன்னெடுக்குமாறு மாவட்ட அபிவிருத்திக் குழுக்களுக்கும் அறிவுறுத்தியுள்ளோம். இந்த வேலைத்திட்டம்இருமாதங்களுக்குள் நிறைவு செய்யப்படவுள்ளது. காணி ஆணையாளர் அலுவலகம், மகாவலி அமைச்சு, அளவையியல் திணைக்களம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இந்த காணிகளை பெற்றுக் கொண்டதன்பின்னர்ஆளும்தரப்பின் விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்துடன் இணைந்து கொள்வது உங்களது பொறுப்பாகும். நாட்டின் பொருளாதாரத்தை நவீனமயப்படுத்தி போட்டித்தன்மை நிறைந்தஏற்றுமதிபொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்த வேண்டிய பொறுப்பு நம்மிடம் உள்ளது.

விவசாய நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளை ஆளும்தரப்பு முதன்மைத் திட்டமாகக் கருதிச் செயற்படுத்தும்நிலையில்அதற்குரிய ஒத்துழைப்பை வழங்குவது தொடர்பில் ஆராய்வதற்கான ஜப்பானின் அயலுறவுத்துறை அமைச்சர் வருகிறார். அதேபோல் அந்த வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து தேடியறிந்து அடுத்த மூன்று, நான்கு மாதங்களுக்குள்வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஒத்துழைப்பைவழங்கும்நோக்கில்உலக வங்கியின் பிரதிநிதிகளும் ஜூன் மாதத்தில் இலங்கை வரவுள்ளனர். அதற்கான திட்டங்களை சமர்பிக்க வேண்டியிருப்பதால் இதனை சட்டபூர்வமாக மாற்றியமைப்பதற்கானநடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். அதன்படிநாட்டை முன்னேற்றிச்செல்லநாம்முயற்சிக்க வேண்டும்.

இந்த வேலைத்திட்டத்துடன் அனைவரும் ஒன்றுபட வேண்டும். பொலன்னறுவையை நாட்டின் பிரதான ஏற்றுமதி மாவட்டமாக மாற்றியமைக்க முடியும். அதற்கான வேலைத்திட்டங்களை நாம் தற்போது செயற்படுத்தியுள்ளோம். 76 வருடங்களாக என்ன செய்திருக்கிறீர்கள் என சிலர் கேட்கிறார்கள். நீர்பாசன் திட்டங்கள், மின் உற்பத்தி நிலையங்கள்என்பவற்றைஏற்படுத்தி விவசாயிகளை உருவாக்கி நாட்டை அரிசியில் தன்நிறைவடையச் செய்திருக்கிறோம்.

இருப்பினும் இந்த பகுதிகளை வந்து சேராமல் இருக்கும் அபிவிருத்திகளை ஏற்படுத்த நான் பொறுப்பேற்கிறேன். அதற்காக ஒன்றுபடுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

ஆளும் தரப்பைப் பிளவுபடுத்த வேண்டுமென நான் ஒரு நாளும் சொல்லப் போவதில்லை. இன்று இருப்பதுபுதுமையானஆட்சியாகும். வேண்டாமென அனைவரும் வெறுத்து ஒதுக்கிய ஆட்சியை நான் ஏற்றுக்கொண்டேன். எவரும் இதனை ஏற்க முன்வரவில்லை. அத்துடன்,நாட்டின் முன்னேற்றத்திற்கான வேலைத் திட்டத்தை நாங்கள் ஆரம்பித்தோம். தொடர்ந்தும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தி எதிர்கால இளைஞர் சமூகத்திற்கான சிறந்த எதிர்காலத்தைக் கட்டமைக்கவேண்டும் - என்று ஜனாதிபதி தெரிவித்தார்.




# சிலோன் ஜேர்னலிஸ்ட் போரம் ஏற்பாட்டில் சர்வதேச ஊடக சுதந்திரதின நிகழ்வு







(எஸ்.அஷ்ரப்கான்)

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு சிலோன் ஜர்னலிஸ்ட் போரம் ஏற்பாடு செய்த நிகழ்வு கல்முனை அல்தாப் உணவகத்தில் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றன.

போரத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.ஜஃபர் ஜே.பி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் கல்முனை கிளை தலைவர் மௌலவி ஏ.எல்.எம். முர்ஷித் (முப்தி) ஸஹ்தி,நஜ்மி கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய மௌலவி ஏ.எல்.எம்.முர்ஷித் (முப்தி),

நம் எல்லோருடைய நோக்கமும் எமது மரணத்துக்கு முன்னால் இந்த சமூகங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதே,

நல்ல விடயங்களை செய்கின்றபோது நாம் புகழை எதிர்பார்த்து செய்வோமேயானால் அதற்கான உண்மையான கூலி எங்களுக்கு கிடைக்காது.

ஓர் ஊடகவியலாளர் என்பவர் நரகத்தையும் சம்பாதிக்கலாம். சொர்க்கத்தையும் சம்பாதிக்கலாம். முஸ்லிம் ஊடகவியலாளர்கள் என்பவர்கள் இறைவனுக்கு பயந்து சொர்க்கத்தை சம்பாதிக்கக் கூடிய வகையில் இந்த ஊடகத்துறையை எவ்வாறு பயன்படுத்தி சேவை செய்ய முடியுமோ அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். நல்ல விடயங்களை வெளிக்கொண்டு வர வேண்டும்.

குர்ஆன் சொல்கிறது, ஏதாவது ஒரு செய்தி உங்களிடம் வருகின்றதா அதனை தெளிவாக அறிந்ததன் பின் தான் அதனை வெளியிடுங்கள் என்று கூறுகிறது.

எண்ணிக்கையில் குறைவானவர்களாக நாம் இருந்தாலும் இளைஞர்கள் அனுபவசாலிகள் இருந்து கொண்டு நாங்கள் சமூகத்துக்கு நல்ல விடயங்களை செய்ய வேண்டும். நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் ஆரம்ப கால இஸ்லாமிய பிரசாரத்தின்போது குறித்த சில நண்பர்கள் மாத்திரமே அவர்களுடன் இருந்தார்கள். ஆனால் இஸ்லாம் முழு உலகுக்கும் வியாபித்ததல்லவா? எனவே தான் நாங்கள் இஹ்லாஸோடு பொறுமையும் கவலையும் வைத்து செயற்படுவோமாக இருந்தால் எமது சேவைக்கான முழு பிரயோசனத்தையும் பெற்றுக் கொள்ள முடியும் என்றார்.

இங்கு பிரதம அதிதி மௌலவி ஏ.எல்.எம்.முர்ஷித் (முப்தி) சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தினால் சர்வதேச ஊடக சுதந்திர தினத்தின் நினைவாக நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் பொதுச் செயலாளர் எஸ்.அஸ்ரப் கான், பொருளாளர் ஐ.ஏ.சிறாஜ், தவிசாளர் - றியாஸ் ஆதம் மற்றும் தேசிய அமைப்பாளர் எம்.ஏ.றமீஸ் உட்பட நிர்வாக சபை உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர். (05)

## கடற்கரை கரபந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் அம்பாறையும், பெண்கள் பிரிவில் திருகோணமலையும் சம்பியன்களாக தெரிவு





(கே எ ஹமீட்)

48 ஆவது தேசிய விளையாட்டு விழாவிற்கான கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகள் தற்போது மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் எஸ்.சிவராஜா தலைமையில் மிகச்சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

வெள்ளிக்கிழமை அட்டாளைச்சேனை கடற்கரையில் இடம்பெற்ற கடற்கரை கரபந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் சம்பியனாக அம்பாறைற மாவட்டமும், பெண்கள் பிரிவில் சம்பியனாக திருகோணமலை மாவட்டமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆண்களுக்கான அரையிறுதிப் போட்டியில் அம்பாறை மாவட்ட அணியும், மட்டக்களப்பு மாவட்ட அணியும் பங்குபற்றின. இதில் 21-10, 21-15 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டு செட்களையும் வெற்றி கொண்டு அம்பாறை மாவட்ட அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இறுதிப் போட்டி அம்பாறை மாவட்ட அணிக்கும், திருகோணமலை மாவட்ட அணிக்குமிடையில் இடம்பெற்றது. இதில் 21:11, 21:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் அம்பாறை மாவட்ட அணி வெற்றி பெற்று கிழக்கு மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் தேசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றுவதற்கான தகுதியையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, பெண்களுக்கான அரையிறுதிப் போட்டியில் அம்பாறை மாவட்ட அணியும், மட்டக்களப்பு மாவட்ட அணியும் பங்குபற்றின. இதில் 21 : 08, 21 : 08 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டு செட்களையும் வெற்றி கொண்டு அம்பாறை மாவட்ட அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இறுதிப்போட்டி அம்பாறை மாவட்ட அணிக்கும், திருகோணமலை மாவட்ட அணிக்குமிடையில் இடம்பெற்றது. இதில் 21 : 02, 21 : 10 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டு செட்களையும் வெற்றி கொண்டு திருகோணமலை மாவட்ட அணி வெற்றி பெற்று கிழக்கு மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் தேசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றுவதற்கான தகுதியையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்ட அணிகள் பங்கேற்பதுடன் குழுநிலைப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருவதுடன் மெய்வல்லுநர் போட்டிகளுடன் மாகாண விளையாட்டு விழா நிறைவு பெறும்.

கிழக்கு மாகாண விளையாட்டு விழாவிற்கான சகல ஏற்பாடுகளும் மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சிவராஜா தலைமையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (05)

## இலவச சட்ட ஆலோசனை மற்றும் உதவி வழங்கல் சேவை பொகவந்தலாவையில்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நேற்றும் இன்றும், பொகவந்தலாவையில் இலவச சட்ட ஆலோசனை மற்றும் உதவிவழங்கல் சேவை முன்னெடுக்கப்படுகின்றது.

பொகவந்தலாவை புனித மரியாள் கல்லூரியில் சனிக்கிழமையும் , ஞாயிற்றுக்கிழமையும் மு.ப 9.00 - பி.ப 4.00 மணி வரை இந்த இலவச சேவை முன்னெடுக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிதியுதவியின கீழ் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்பட்டுவரும் இலவச சட்ட ஆலோசனை மற்றும் உதவிவழங்கல் சேவையின் ஓரங்கமாக அமைந்திருக்கும் இன்றைய சேவை வழங்கலில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களான நிமல் புஞ்சிஹேவா மற்றும் பேராசிரியர் ரி.தனராஜ் மற்றும் ஆணைக்குழு அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

அதுமாத்திரமன்றி இன்றைய தினம் பிரதேச செயலக அதிகாரிகள், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி பிரிவு அதிகாரிகள் உள்ளடங்கலாக முக்கிய சேவை வழங்கலுடன் தொடர்புடைய அதிகாரிகளும் வருகைதரவுள்ளனர்.

எனவே பிறப்புச்சான்றிதழ், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, காணி உறுதிப்பத்திரம், மனித உரிமை மீறல் சம்பவங்கள் போன்ற விவகாரங்களில் ஏதேனும் சேவை வழங்கலையோ அல்லது ஆலோசனைகளையோ பெற்றுக்கொள்ள விரும்பும் சகலரும் பொகவந்தலாவை புனித மரியாள் கல்லூரிக்கு வருகைதரமுடியும் என மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(05)

## தமிழக அமைச்சர் பழனிவேல் தியாகராஜனை சந்தித்தார் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான்

(கே எ ஹமீட்)



தமிழக தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிற்றல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜனை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் மரியாதை நிமித்தமாக கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது, இலங்கையில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டிருந்த தருணத்தில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசில் நிதி அமைச்சராக இருந்த காலக்கட்டத்தில், இலங்கை மக்களுக்கு தமிழக அரசு வழங்கிய உதவிகளுக்கும் ஒத்துழைப்புகளையும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நினைவு கூர்ந்தார்.

அத்துடன், தமிழகத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகளை வலுவாக பேணவும் இருவரும் கலந்துரையாடினர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சால் முல்லைத்தீவில் நடமாடும் சேவை







தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் 'நானே ஆரம்பம் வெல்வோம் ஸ்ரீலங்கா -சிமாட் சூரன்களோடு' எனும் தொனிப்பொருளிலான நடமாடும் சேவை ஒன்று வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசசபை மைதானத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நானயக்காரவும் , இராஜாங்க அமைச்சரும் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான காதர் மஸ்தானும் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கமும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரிகள் வடமாகாண பிரதம செயலாளர் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் மேலதிக மாவட்ட செயலாளர் சி.குணபாலன் உள்ளிட்ட அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்

இஸ்ரேல் நாட்டின் தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் கட்டுமானத்துறைகளில் வேலை வாய்ப்புகளுக்கு பதிவு செய்தல் உள்ளிட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்புகளோடு மேலும் பல சேவைகளை பற்றி கலந்துரையாடப்பட்டது.

குறித்த நிகழ்வானது நேற்றும் இன்றுமாக இரு தினங்களில் நடைபெறவுள்ளது.

தெளிவூட்டல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், வெளிநாடுகளில் பணிபுரிவோரின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றல், தொழில் வங்கியில் பதிவு செய்தல், உத்தேச தொழில்வாய்ப்புகள், சட்டம் தொடர்பான விழிப்புணர்வு, வெளிநாடுகளில் பணிபுரிவோரின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல் போன்ற பல சேவைகள் நடமாடும் சேவையூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது ருமேனியா, மத்திய கிழக்கு நாடுகள், இஸ்ரேல், ஐரோப்பா நாடுகளில் தொழில் ஒன்றை பெற்றுக் கொள்வது தொடர்பாக முகவர் நிறுவனங்களால் தெளிவூட்டல்களும் வழங்கி வைக்கப்படவுள்ளன. (05)

## விளையாட்டு விருது வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது









முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட தேசிய, மாகாண ரீதியில் வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் மகளிர் பாடசாலையில் முல்லைத்தீவு வலயக் கல்வி பணிப்பாளர் இ. தமிழ்மாறன் தலைமையில் மிக சிறப்பாக நடைபெற்றது.

வெற்றியீட்டிய மாணவர்களை பாண்ட் வாத்திய அணியினரின் மரியாதையுடன் அழைத்துவரப்பட்டு மங்களச்சுடர் ஏற்றப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டலுவலகள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண திணைக்கள உதவி கல்வி பணிப்பாளர் (உடற்கல்வி) இ. இராஜசீலனும் கலந்து சிறப்பித்தனர்.

அதனைத் தொடர்ந்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.(05)

## வைத்தியர் போன்று நடித்து மருத்துவ நிலையங்களை நடத்துவோர் தொடர்பில் பொலிஸார் விசேட கவனம்

போலி சான்றிதழ்களைப் பயன்படுத்தி மருத்துவ நிலையங்களை நடத்தும் போலி வைத்தியர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மற்றும் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கிடையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் வைத்தியர்களுக்கு வழங்கப்படும் உத்தியோகபூர்வ அடையாளத்துடன் கூடிய ஸ்டிக்கரை வாகனங்களில் ஒட்டி சிலர் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுகின்றனர் .

அத்துடன், சான்றிதழ்கள், தரமற்ற மருந்துகள், வாசனைத் திரவியங்கள் மற்றும் பல்வேறு வகையான அழகுசாதனப் பொருள்கள் விற்பனை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் பொலிஸார் கவனம் செலுத்தியுள்ளனர் .

போலிசான்றிதழ்களைப் பயன்படுத்தி மருத்துவ நிலையங்களை நடத்துபவர்கள் மற்றும் வைத்தியர்கள் போல் நடித்து சில சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(05)

# நான் அம்மா ஆகவில்லை........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வேகத்தடைகள்' இருக்கலாம். புயல் கரை கடந்தாலும் அடை மழை விடாத மாதிரி சிலருக்கு உயிரணுவும் சினைமுட்டையும் இணைந்து கரு உருவானாலும், அது கருப்பைக்கு வந்து தங்கமுடியாத சூழல் அமையலாம்.

ஓர் உயிரணுவானது பெண்ணுறுப்பு வழியாக கருப்பையை அடைந்து, கருக்குழாய் வரை நீந்திச் சென்றால்தான் கரு உருவாக முடியும். சில பெண்களுக்கு உயிரணு நீந்திச் செல்ல முடியாத அளவுக்கு அந்த வழியில் தடைகள் இருக்கலாம். இன்னும் சிலருக்கு பேரிக்காய் வடிவத்தில் சற்றே முன்னோக்கி வளைந்திருக்க வேண்டிய கருப்பை, பிடிக்காத ஒருவரைப் பார்க்க நேரும்போது நாம் முகத்தைத் திருப்பிக்கொள்வதுபோல பின்னோக்கி வளைந்துவிடும். குழந்தை கருப்பையில் தங்காமல் போவதற்கு இந்தத் தவறான அமைப்புகளும் காரணம் ஆகலாம்.

கருப்பையில் கிருமித்தொற்று ஏற்பட்டாலும், நார்க்கட்டிகள் (Fibroids) வளர்ந்தாலும் குழந்தையில்லாக் குறை உண்டாகலாம். இன்னும் சிலருக்குக் காசநோய் ஃ பால்வினைநோய் காரணமாக கருக்குழாய் அடைத்துக்கொள்ளும் பெண்ணுறுப்பில் ஏற்படும் கிருமித்தொற்றால் அங்குள்ள திரவம் அமிலத்தன்மைக்கு மாறி உயிரணுவை அழிக்கும். இதனாலும் குழந்தை இல்லாமல் போகும்.

### ஹார்மோன் கலாட்டா!

பெரும்பாலான பெண்களுக்கு மாதச்சுழற்சி சரியாக அமையாமல் போவதுதான் குழந்தை இல்லாமல் போவதற்கு முக்கியக் காரணம். இதற்கு ஈஸ்ட்ரோஜென், புரோஜெஸ்ட்ரான், தைராய்டு, பிட்யூட்டரி ஹார்மோன்கள் செய்யும் கலாட்டாதான் காரணமாக இருக்கும். இன்றைய நவீன வாழ்வியலில் வேலைக்குப் போகும் பெண்களுக்கு மன அழுத்தம் இருக்கிறது. இரட்டை வேலைச்சுமை, 'சீரியல் போதை', நவீன 'கேட்ஜட்ஸ்'களால் இவர்களுக்கு இரவுத் தூக்கம் தள்ளிப்போகிறது.

மேலும், இப்போதைய பெண்களிடம் புகைபிடிப்பதும் மது அருந்துவதும் அதிகரித்துவருகிறது. இவை அனைத்தும் ஒன்றுகூடி ஹார்மோன் சுரப்பைக் கலைத்துவிடுவதால், சொருகாணி சரிந்துபோன சக்கரம்போல் மாதச்சுழற்சி தடுமாறுகிறது. இன்னும் பலருக்கு உடற்பருமன், நீரிழிவு, பி.சி.ஓ.டி., ரத்தசோகை, பிறவிக் கருப்பை குறைபாடு இருக்கும். திருமணத்துக்கு முன்பே இவற்றைச் சரிப்படுத்திவிட வேண்டும். இல்லாவிட்டால், அவரவர் உடல் தன்மையைப் பொறுத்து குழந்தை உண்டாவதில் சிக்கல் ஏற்படும்.

தவிரவும், இப்போது பத்து வயதிலேயே பெண்கள் பருவமடைவதும், தாமதமாகத் திருமணம் செய்துகொள்வதும், முதல் குழந்தை பெறுவதைத் தள்ளிப்போடுவதும் இந்தத் தலைமுறைப் பெண்களுக்குக் குழந்தையில்லாக் குறையைக் கொண்டுவருகின்றன. பொதுவாக, பெண்களுக்கு 15 - 30 வயது வரை சினைமுட்டை உண்டாவது சரியாக நடக்கும். அதற்குப் பிறகு அதன் வேகம் - தரம் குறைந்துவிடும்.

### பரிசோதனைகள் என்னென்ன?

மருத்துவர்கள் தைராய்டு உள்ளிட்ட ஹார்மோன்களை அளக்கும் ரத்தப் பரிசோதனைகள், அல்ட்ரா சவுண்ட், கருப்பையைக் காணும் பரிசோதனை, அதைச் 'சுத்தம்' செய்யும் பரிசோதனை, கருக்குழாய் அடைப்பைக் கண்டறியும் பரிசோதனை, லேப்ராஸ்கோப்பி, பிஜிடி (PGD), பிஜிஎஸ் (PGS), இஆர்ஏ (ஈ.ஆர்.ஏ) பரிசோதனைகள் எனப் பெண்ணின் தேவையைப் பொறுத்து மேற்கொள்கின்றனர். இவை சொல்லும் காரணத்தைப் பொறுத்து சிகிச்சைகளைச் சொல்கின்றனர்.

### சிகிச்சைகள் என்னென்ன?

சினைமுட்டை சரியாக வெளிவராதவர்களுக்கு ஹார்மோன் மாத்திரைகள் ஃ ஊசிகள் தரப்படும். கருப்பையில் குறைபாடு இருந்தால், அதைச் 'சுத்தம்' செய்வது உள்ளிட்ட சில சிகிச்சைகள் மூலம் குழந்தையில்லாக் குறை நீங்கிவிடும். கருக்குழாயைப் பொறுத்தவரை, இரண்டில் ஒன்று அடைப்பில்லாமல் இருந்தாலே போதுமானது. இரண்டிலுமே அடைப்பு என்றால், அறுவை சிகிச்சை தேவைப்படும். இந்த வழிகளில் எல்லாம் குழந்தை உருவாக வழி இல்லை என்றால், அடுத்தகட்டமாக 'செயற்கைக் கருத்தரிப்பு முறை'கள் கைகாட்டப்படும்.

ஆனாலும், பல பெண்கள் ஆரோக்கியமான உணவுமுறை மூலம் உடற்பருமனைக் குறைத்தும் சரியான வாழ்க்கைமுறை மூலம் மன அழுத்தங்களைத் தவிர்த்தும் குழந்தைப் பேறு இல்லாத குறையை முடிவுக்குக் கொண்டுவந்திருக்கின்றனர். ஆகவே, முதலில் இந்த முயற்சிகளில் இறங்குவதே நல்லது.

### சிகிச்சைக்குப் போகிறீர்களா?

பலரும் குழந்தையின்மை பிரச்சினைக்கு நவீன மருத்துவத்தில் மட்டுமில்லாமல் சித்தா, ஆயுர்வேதம், ஹோமியோபதி போன்ற மாற்று மருத்துவமுறைகளிலும் நம்பிக்கை வைத்து சிகிச்சைக்குச் செல்வது உண்டு.

அதேசமயம் இதற்கான பரிசோதனைகள், சிகிச்சை முறைகள் அனைத்துமே மிகவும் நுணுக்கமான விஷயங்கள் என்பதால், பல மருத்துவர்களைப் பார்த்துச் சலிப்படைவதற்குப் பதிலாக, ஒரு மருத்துவரை அணுகிப் பொறுமையுடன் சிகிச்சை பெறுவது அவசியம்.

சிகிச்சை முறைகளை அடிக்கடி மாற்றிக்கொண்டிருந்தால் பணம் போகும் நேரம் விரயமாகும் பெண்ணுக்கு ஆரோக்கியம் கெடும். சிகிச்சை முறை எதுவானாலும், தகுதியான திறமையான அனுபவமிக்க அறம் நிறைந்த மருத்துவரைத் தேர்வுசெய்து தம்பதிகள் இருவரும் சேர்ந்து சிகிச்சைக்குச் சென்றால் குழந்தைப் பேறு கைகூடும்.

## பாடசாலையில் திருட்டு சந்தேகநபர் கைது

### கல்கிஸ்ஸையில் சம்பவம்

கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவிற்குறப்பட்ட அத்திட்டிய பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற திருட்டு சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கல்கிஸ்ஸை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்திட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து இரும்புக் கட்டில், நீர்த் தாங்கி , மெத்தை, அலுமினியம் கதவு ,மின் விசிறி உள்ளிட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸ்ஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் . (05)

## கண்டியில் வீடொன்று தீயில் எரிந்து நாசம்

கண்டிபொலிஸ்பிரிவிற்குட்பட்ட தல்வத்தபிரதேசத்தில்அமைந்துள்ள வீடு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக அவ்வீடு கடும் சேதத்திற்கு உள்ளாகி உள்ளதாகப்; பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு ஏற்பட்டுள்ளஇத்தீவிபத்துதொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து கண்டி மாநகர சபையின் தீயணைப்பு பிரிவின் உதவியுடன் தீயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத் தீ விபத்தின் போது உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் பாரிய பொருள் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.(05)

## வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 22,443 டெங்கு நோயாளர்கள் பதிவு



வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 22 ஆயிரத்து 443 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன் போது, டெங்கு நோயால் 9 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது .

மேல் மாகாணத்தில் அதிகளவுடெங்குநோயாளர்கள் பதிவாகி யுள்ளதுடன், அதன் எண்ணிக்கை 8071 ஆகும்.

மேலும், வடக்கு மாகாணத்தில் 4375 பேரும், மத்திய மாகாணத்தில் 1890 பேரும், வடமேற்கு மாகாணத்தில் 1616 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 1855 பேரும், தென் மாகாணத்தில் 1723 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# மனித பாவனைக்குதவாத முறையில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய பால் பொருள் உற்பத்தி தொழிற்சாலைக்குச் சீல்

மனித பாவனைக்கு உதவாத முறையில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த பால் மூலமான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்று கெக்கிராவ பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகளினால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

பால் மூலமான ஐஸ்கிரீம், யோகர்ட் மற்றும் தயிர் ஆகிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்றே இவ்வாறு சீல் வைக்கப்பட்டுள்ளது.

கெக்கிராவ பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்திற்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, இந்த தொழிற்சாலையில் இருந்த சில உணவுப் பொருள்களில் ஈ போன்ற பூச்சி வகைகள் காணப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த தொழிற்சாலையில் பணியாற்றும் பணியாளர்களின் உடல்நிலை பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டிருந்த பணியாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(05)

# அட்டாளைச்சேனை சம்புகளப்புக்கு வீதிக்கு மின்சாரம் வழங்கி வைப்பு

(எம்.எப். றிபாஸ்)

அட்டாளச்சினை பிரதேச சம்புகளப்பு வீதிக்கு மின்சாரம் வழங்கும் வேலைத் திட்டம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

அட்டாளச்சேனை பிரதேச சபையின் செயலாளர் எம். ஐ.எம். பாயிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு தேசிய காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. எல். எம். அதாஉல்லஹ் பிரதம அதிதியாகவும், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். எல். ஏ. கமல்நெத்மிணி கௌரவ அதிதியாகவும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் யூ. எல். ஏ. அஸீஸ், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ் எல் எம் ஹனிபா, அட்டாளச்சேனை உதவி பிரதேச செயலாளர் நஜிஹா முஸாபீர், பெரிய பள்ளிவாசல் தலைவர் உட்பட செயலாளர் எம்.எஸ்.எம். ஜெளபர் மற்றும் கல்வியியலாளர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அட்டாளைச்சேனை பிரதேச மக்களின் நீண்ட கால தேவையாகவிருந்து இவ்வீதிக்கு மின்சாரம் இடப்பட்டமையையிட்டு மக்கள் நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கின்றனர். (05)

# முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மயூராபதி அம்மன்: ஆலயத்தில் வழிபாடு





முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ உட்பட ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் வெள்ளவத்தை மயூராபதி ஶ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை இரவு விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர். (05)

# திருமலை உயர் தொழில்நுட்ப கற்கை நெறி இடை நிறுத்தம்

## அமைச்சு செயலருடன் தௌபீக் எம்.பி. பேச்சு



(எச் எம் ஹலால்தீன்)

திருகோணமலை உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் உயர் தேசிய டிப்ளோமா, தகவல் தொழில் நுட்பம் கற்கைநெறிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் மாணவர்கள் தமது எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளதாக தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டதுடன், பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் குழு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்யை சந்தித்து அவரது கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இதன்பிரகாரம் கல்வி அமைச்சின் செயலாளருடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பேசியதையடுத்து கற்கைநெறியை தொடர்ந்து நடத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக அமைச்சின் செயலாளர் உறுதியளித்தார்.(05)

# பிரதான வீதிகளின் ஓரங்களில் மருத்துவ கழிவுகள் கொட்டல்

## மன்னாரில் மக்கள் விசனம்

மன்னார் பிரதேச சபைக்கு



சொந்தமான மன்னார் தலைமன்னார் பிரதான வீதி ஓரங்களில் மருத்துவ கழிவுகள் உட்பட பொலித்தீன் கழிவுகள் முறையற்றவிதமாக கொட்டப்பட்டுள்ளமை சுகாதார சீர்



கேட்டை ஏற்படுத்தியுள்ளது

குறிப்பாக வீதி ஓரங்களில் பொலித்தீன் பைகளால் சுற்றப்பட்டு பாரிய அளவு குப்பைகள் வீதி ஓரங்களில் பல்வேறு இடங்களில் கொட்டப்பட்டுள்ள நிலையில் அவை காற்று காரணமாக முழு பகுதியிலும் நிறைந்து காணப்படுவதுடன் மிருகங்களும் அவற்றை உண்ணும் அவல நிலை ஏற்பட்டுள்ளது

குறிப்பாக மருத்துவ கழிவுகளும் முறையற்ற விதமாக கொட்டப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதுடன் மாவட்டத்தின் பிரதான வீதியில் இவ்வாறான குப்பைகள் நீண்ட காலமாக கொட்டப்பட்டுவருவதை மன்னார் பிரதேச சபை கவனத்தில் கொள்ளாமல் குப்பைகளை அகற்றாமல் செயற்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

அதே நேரம் பொலித்தீன் பைகள் பிலாஸ்ரிக் போத்தல்கள் அதிகளவு கொட்டப்பட்டு காணப்படுகின்ற நிலையில் அவ்வப்போது பெய்யும் மழையின் போது டெங்கு நுளம்புகளும் பெருக கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

எனவே அப்பகுதியில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை உரிய விதமாக அகற்றுவதுடன் அப்பகுதிகளில் குப்பைகளை கொட்டும் நபர்களுக்கு எதிராக பிரதேச சபை மற்றும் சுகாதார ஊழியர்கள் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொது மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.(05)

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.05.2024இல் வெளியிடப்பெற்றது